# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 0129/2015
ஆணை எண். 071/2016
நாள் : 15/04/2016

திரு. B செந்தில்குமார்
2வது வார்டு கவுன்சிலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி

— முறையீட்டு மனுதாரர்

திரு. ஆ. தேவா,
முந்தைய செயல்அலுவலர்,
மொடக்குறிச்சி பேரூராட்சி.
( தற்போது பெருந்துறை பேரூராட்சியில்
செயல் அலுவலராகப் பணிபுரிகிறார் )

— எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி , 2வது வார்டு உறுப்பினர் திரு. பி. செந்தில் குமார் அவர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 0129/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்முறையீடு தொடர்பாக உரிய விசாரணைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்டுள்ளவாறு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

## ஆணை

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி 2வது வார்டு உறுப்பினர் திரு. பி. செந்தில் குமார் என்பவரின் கையொப்பமிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டுள்ளது.

இம்முறையீட்டு மனுவில் மொடக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலர் திரு. தேவா என்பவர் மொடக்குறிச்சி செயல் அலுவலராக பொறுப்பேற்றதில் இருந்து பதவி மாறுதல் தேதிவரை அரசு விதிமுறைகளை மீறிய செயல்களிலும் போலி இரசீதுகள் மூலம் பேரூராட்சி பணத்தை எடுத்தும் பேரூராட்சியின் பொது நிதியை பல மடங்கு இழப்பு செய்துள்ளார் என குறிப்பிட்டு பின்வரும் குற்றச்சாட்டுக்களை எழுப்பியிருந்தார்.

2. " மொடக்குறிச்சி பேரூராட்சியில் பணிபுரிந்த செயல் அலுவலர் திரு தேவா அவர்கள் (தற்போது பெருந்துறை பேரூராட்சி செயல் அலுவலர், ஈரோடு மண்டலம் ) செய்ததாக குறிப்பிடும் முறைகேடுகள் விவரம் வருமாறு :-

மொடக்குறிச்சி பேரூராட்சி பகுதிகளில் விவசாய விளைநிலங்களை வீட்டுமனைகளாக பிரித்து மன்றதீர்மானத்தை மட்டும் செயல் அலுவலர் பெயரில் பத்திரப்பதிவு அலுவலகத்தில் தான செட்டில்மென்ட் பத்திரம் நில உரிமையாளர்களிடம் பெற்று அதனை மன்ற அங்கீகாரம் பெற்று அதில் புதிய வீடுகள் கட்டப்பட்டு, வீட்டுமனை கட்டிட அங்கீகாரம் கொடுத்து சொத்து வரியை நிர்ணயம் செய்து சொத்து வரி இரசீது கொடுத்துள்ளார். இவ்வாறு வீட்டுமனைகளாக பிரிப்பதற்கு வருவாய்த்துறை அலுவலரிடமோ, தமிழக நகர ஊரமைப்புத் துறையினரால் (DTCP) எவ்வித அனுமதியோ, அங்கீகாரமோ, தகவல்களோ தெரிவிக்காமல் மேற்படி செயல் அலுவலர் செய்துள்ளார். இது முற்றிலும் அரசு விதிமுறைகளுக்கு மீறிய செயலாகும். புகாரில் குறிப்பிட்ட விவசாய விளைநிலங்களை வீட்டுமனைகளாக பிரித்து மன்றதீர்மானத்தை தான செட்டில்மென்ட்களாக பெற்று அதில் வீடுகள் கட்டப்பட்டு அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

மேலும் மொடக்குறிச்சி பேரூராட்சி பகுதிகளில் (செயல் அலுவலர் திரு. தேவா அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து ) போடப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகள் (போர்வெல்ஸ்) ஆழ அளவுகளை குறைத்தும் ஆழ்குழாய் கிணறுகளுக்குள் இறக்கப்படும் பைப்கள் G.I இரும்பு பைப்புகளுக்கு பதிலாக சாதாரண PVC Plastic பைப்கள் அனைத்து ஆழ்குழாய் கிணறுகளுக்கும் ஒப்பந்ததாரரை வைத்து பொருத்தப்பட்டுள்ளது. மேலும் இதற்கு ஒப்பந்த புள்ளிகளில் குறிப்பிட்டுள்ளவாறு இல்லாமல் விதிமுறைகளை மீறி PVC Plasitc பைப்களை பொருத்தி G.I இரும்பு பைப்புகளுக்கு உண்டான பில் தொகையை செயல் அலுவலர் திரு. தேவா எடுத்துள்ளார். இது முற்றிலும் முறைகேடான செயலாகும். பேரூராட்சியின் வருவாய் இழப்பாகும். இதுபோல் பல போலி பில்கள் மூலம் பேரூராட்சி நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி புகார்கள் குறித்து மொடக்குறிச்சி செயல் அலுவலரிடமிருந்து பத்திவாரியான பதில் அறிக்கை பெறப்பட்டது. மொடக்குறிச்சி பேரூராட்சியின் செயல் அலுவலரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையில் (ந.க.எண்.40/15, நாள் 18.09.2015) கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

(i) மனுதாரரின் புகாரில் DTCP அனுமதி பெறாமல் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு கட்டிட அனுமதி வழங்கி பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மொடக்குறிச்சி பேரூராட்சியில் 2012 – 2013 ஆம் ஆண்டு தணிக்கையின் போது மேற்படி இனங்கள் முறையாக தணிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்படி தணிக்கை அறிக்கையில் இச்செயலால் பேரூராட்சிக்கு ரூ.35,42,100/- இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும். இவ்விழப்பினை சம்பந்தப்பட்ட விண்ணப்ப தாரரிடமோ அல்லது பொறுப்பான நபரோ செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) மொடக்குறிச்சி பேரூராட்சியில் புதியதாக அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளில் GI குழாய்களுக்கு பதிலாக PVC குழாய்கள் அமைக்கப்பட்டு முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறிய புகாருக்கு சென்னை பேரூராட்சிகள் இயக்குநர்

அலுவலக ஆய்வு அலுவலர் மற்றும் பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர், திருப்பூர் மாவட்டம் ஆகியோர் 09.04.2015 மற்றும் 10.04.2015 ஆகிய தேதிகளில் மனுதாரர் முன்னிலையில் மேற்படி ஆழ்குழாய் கிணற்றில் தலஆய்வுகள் மேற்கொண்டு அதன் விவரத்தினை பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.

4. மனுதாரரிடமிருந்து வரப்பெற்ற 16.10.2015ம் நாளிட்ட பிறிதொரு முறையீட்டில் கூடுதலாக கீழ்க்கண்டவாறு விளக்கத்தினையும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

" எனது புகாருக்குபின் பி.வி.சி பைப்களை எடுத்து விட்டு ஜி ஐ பைப்களை பொருத்தியது "

மனுதாரர் இது குறித்து வீடியோ குறுந்தகடு ஒன்று அனுப்பி வைத்திருந்தார். மேற்படி குறுந்தகட்டில் உள்ள பதிவுகள் இம்முறைமன்ற நடுவத்தால் பார்வையிடப்பட்டது. ஒருசில இடங்களில் புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு பைப்புகள் மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை இக்குறுந்தகடு ஆதாரம் மூலம் அறியமுடிந்தது.

5. மேலும் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது 02.06.2015ம் நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு ஏற்கனவே மனுதாரருக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

" ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி பேரூராட்சி வார்டு எண்.9 ஆலாங்காட்டு வலசில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள சாதாரண பி.வி.சி பைப்களை எடுத்துவிட்டு ஜி.ஐ. பைப்புகளை மாற்றியது தொடர்பாக மொடக்குறிச்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நேர்வு குறித்து சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரகம் தணிக்கை குழுவினரால் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வுக்குழுவிடமிருந்து ஆய்வறிக்கை இதுவரை வரப்பெறவில்லை, அறிக்கை வரப்பெற்றபின் அறிக்கையின் பேரில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது".

6. இதனை;த தொடர்ந்து மனுதாரரிடமிருந்து 16.10.2015 நாளிட்டு வரப்பெற்றுள்ள முறையீட்டில் கீழ்க்கண்ட முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

" ஈரோடு மண்டலம், மொடக்குறிச்சி பேரூராட்சியில் 2012 – 2013ம் ஆண்டு தணிக்கை ஈரோடு உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அலுவலக ஆய்வாளர்களால் கடந்த 24.06.2015 முதல் 14.07.2015 முடிய தணிக்கை நடைபெற்றது. தணிக்கை அறிக்கையில் மேற்கண்ட ஆண்டில் ரூ.38,42,047/- (ரூபாய் முப்பதெட்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நாற்பத்தேழு மட்டும்) இழப்புத் தொகையாக ஏற்படுத்தப்பட்டது. இந்த இழப்புத் தொகையினை சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களிடம் வசூல் செய்யவும், மேற்படி இழப்பு தொகையை ஏற்படுத்தியதற்காக செயல் அலுவலர் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுத்தும், இழப்புத் தொகையை வசூல் செய்யவும் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்".

7. இது குறித்து இயக்குநர், உள்ளாட்சி தணிக்கைத் துறை அவர்களிடம் இம்முறைமன்றத்தால் கேட்டுக்கொண்டதற்கிணங்க (க.எண். 0129/அ1/மு.ம.,ந/015 – 9, நாள் 14.01.2016) உரிய விவரங்கள் இயக்குநர் உ.நி.த அவர்களது 22.03.2016 நாளிட்ட கடிதத்தின் மூலம் பெறப்பட்டது.

8. இம்முறைமன்றத்தால் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் படி 27.10.2015 அன்று தற்போது மொடக்குறிச்சி செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் திருமதி S. டார்த்தி, ஆஜராகி அளித்த வாக்குமூலம் பின்வருமாறு :-

" 01.06.2015 முதல் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிகின்றேன். இதற்கு முன்பு ஈரோடு மாவட்டம் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் தலைமை எழுத்தராக பணிபுரிந்தேன். புகார் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள திரு தேவா தற்போது செயல்அலுவலராக பெருந்துறை பேரூராட்சியில் பணியாற்றி வருகிறார். எனக்கு அனுப்பப்பட்ட புகார் மனுவின் நகல் படித்துப்பார்த்தேன். திரு. செந்தில்குமார் இரண்டாவது வார்டு கவுன்சிலராக உள்ளார். அவருடைய புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 9 இனங்கள் அங்கீகாரமில்லாத மனைகளை வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு பேரூராட்சி தான செட்டில்மெண்ட் மன்ற தீர்மானத்தின் மூலமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றில் 2012 - 13, 2013 - 14 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு திரு. தேவா பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் உள்ளாட்சி அமைப்பு மூலம் தணிக்கை செய்யப்பட்டு 2012 – 13 ஆம் ஆண்டுகளுக்கு இதனால் பேரூராட்சிக்கு இழப்பு ரூ. 35,42,100/- எனவும். 2013 – 14ஆம் ஆண்டிற்கு ரூ. 1,99,366/- இழப்பு எனவும் தணிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்குரிய பதில் அறிக்கை சமாதானம் அவர் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. 2014 -15க்கான தணிக்கை தற்போது நடந்து கொண்டிருக்கிறது. அது முடிவடைந்தவுடன் அவர்கள் குறிப்பிடும் விவரம் குறித்து எனது அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

அடுத்த புகாரான ஜிஐ குழாய்களுக்கு பதிலாக பிவிசி பைப் போட்டது குறித்து பேரூராட்சி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஆய்வு செய்து அதனுடைய விவரத்தை பேரூராட்சி இயக்குநருக்கும் 09.04.2015 மற்றும் 10.04.2015 தள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். குற்றம் சாட்டப்பட்டவர் செயல் அலுவலராக இருக்கும்போதுதான் இந்த ஆய்வு நடைபெற்றது. மொத்தமுள்ள 15 வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகள் ஆய்வு செய்தனர். எத்தனை வார்டுகளில் ஆய்வு செய்தனர் என்பது எனக்கு தெரியாது. பேரூராட்சி இயக்குநரக ஆய்வு அலுவலர் திரு. மகேந்திரன் மற்றும் திருப்பூர் மாவட்ட உதவி செயற்பொறியாளர் திரு. மனோகரன் இருவருமே ஆய்விற்கு வந்தனர். தணிக்கை விதிகளின் அடிப்படையில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு பற்றிய குற்றச்சாட்டுகள் சரியாக உள்ளதாக கருதுகிறேன். சம்பந்தப்பட்ட தணிக்கை குறிப்புக்களை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். குற்றம் சாட்டப்பட்ட திரு தேவா செயல்களுக்கு பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் எனக்குறிப்பிட்டார்.

9. இதனை தொடர்ந்து மனுதாரர் தனது 29.12.2015 நாளிட்ட மனுவில் மேற்படி செயல்அலுவலர் 2013 - 2014ம் ஆண்டு தணிக்கையின் படி ரூ.6,43,141/– நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

10. மனுதாரர் தனது 05.01.2016ம் நாளிட்ட முறையீட்டில் தற்போது மொடக்குறிச்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் திருமதி டார்த்தி என்பவர் மீதும் மொடக்குறிச்சி பேரூராட்சியின் துணைத்தலைவர் திருமதி எஸ். தமிழ்செல்வியின் மீதும் சில புகார்களை தெரிவித்துள்ளார். அதில் பேரூராட்சி பகுதியில் முறையான அனுமதியின்றி பலவகையான மரங்கள்

மற்றும் முள்வேலி மரங்கள் வெட்டி ஏலம் விடப்பட்டது. இதனால் ஏற்பட்ட நிதியிழப்பு குறித்து புகார்கள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மொடக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள விவசாய நிலங்கள் வீட்டுமனை பிரிவுகளாக பிரிக்க விதிகளை மீறி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. இப்புகார் குறித்து தனியே பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ள முறைமன்ற பரிசீலனையில் உள்ளது.

11. மொடக்குறிச்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு. தேவா என்பவர் ஏற்படுத்திய நிதிஇழப்பீடு தொடர்பான 2012 - 2013ம் ஆண்டிற்கான உள்ளாட்சி தணிக்கை துறைகளின் அறிக்கைகளும் இம்முறைமன்றத்தால் கோரப்பட்டது. (கடித எண். 0129/அ1/2015-9/14.01.2016).

12. ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடமிருந்து மேற்படி அலுவலரது முறைகேடுகள் குறித்து ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் இயக்குநர் அறிக்கைகளும் இம்முறைமன்ற நடுவத்தில் 14.01.2016ம் நாளிட்ட கடிதத்தின் மூலம் கோரப்பட்டது. அதற்கிணங்க ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அறிக்கை ந.க.எண்.2026/2016 –ப3/நாள் 12.02.2016ன் வாயிலாக பெறப்பட்டது. மேற்படி கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

> *தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் கடிதத்தில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சி முன்னாள் செயல்அலுவலர் திரு. தேவா என்பவர் அரசிற்கும், பேரூராட்சிக்கும் வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளதாகவும், அதில் 2012-2013ம் ஆண்டு சுமார் ரூபாய் 38 இலட்சமும் 2013-2014ம் ஆண்டில் 6,43,141/- ரூபாயும் நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து பத்திவாரியான பதிலறிக்கை அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில், மேற்படி மேல்முறையீட்டு மனுவில் மொடக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி டார்த்தி என்பவரிடமிருந்து பெறப்பட்ட பத்திவாரியான அறிக்கையினை அனுப்பி வைத்தார். அவ்வறிக்கை பின்வருமாறு -*

<u>குற்றச்சாட்டு எண்.1</u>

மனுதாரர் குறிப்பிட்டுள்ள அனைத்து ரீ. சர்வே எண்களும் முறையாக தணிக்கை செய்யப்பட்டு இக்குற்றச்சாட்டின் மீது 2012 – 2013, 2013 – 2014 மற்றும் 2014 – 2015ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைப் பத்தியில் கீழ்க்கண்டவாறு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1. *மனைப்பிரிவுகள் அங்கீகாரம் வழங்க உரிய வழிமுறைகளை பின்பற்றாமல் மண்சாலையை மட்டும் பேரூராட்சிக்கு தானமாக பெற்றுக்கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள பேரூராட்சி மன்ற தீர்மானங்களின் மூலம் தானக்கிரையம் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயலானது அரசாணை மற்றும் விதிமுறையினை மீறிய செயலாகும்.*

2. *இச்செயலால் இப்பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற வேண்டிய பொது உபயோகத்திற்கான 10 சதவிகிதம் இடம் (Reserve site) உட்கட்டமைப்பு வசதிகளான தார்ச்சாலை, கழிவு நீர் செல்லும் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்குகள் வசதி முதலியவை கிடைக்கப்பெறாமல் இழப்பு ஏற்பட்டுள்ளது.*

3. பேரூராட்சி மன்ற தீர்மானங்களின் மூலமாக இப்பேரூராட்சிக்கு தானமாக பெறப்பட்ட மண்சாலைகள் அடங்கிய பத்திரங்களை (Documents) வருவாய்த் துறைக்கு அனுப்பி உட்பிரிவு (Sub division) செய்யப்படாமல் உள்ளது.

4. பெறப்பட்ட மண்சாலைகள் விவரம் பேரூராட்சியின் சாலைகள் பதிவேட்டில் பதியப்படவில்லை.

5. பேரூராட்சிக்கு மண்சாலைகளை தானமாக பெற்றவுடன் அம்மனையிடங்களை அடங்கிய மனைப்பிரிவுகளுக்குரிய கருத்துரு விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்டு அவற்றினை செயல் அலுவலர் கூர்ந்தாய்வு செய்து அதனை 15 நாட்களுக்குள் மண்டல துணை இயக்குநர் நகரமைப்புத் திட்டம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

6. மன்ற தீர்மானம் எண்.126, நாள் 28.03.2012ன் படி மனையிட ரி. ச. எண்.9/4ஏ தானமாக பெறப்பட்ட மண்சாலை பரப்பளவு 7104 சதுர அடிகளாகும். இத்தீர்மானம் தொடர்பான கோப்பு தணிக்கைக்கு அளிக்கப்படவில்லை. எனவே உரிய கோப்பு அளிக்கப்பட வேண்டும்.

7. மன்ற தீர்மானம் எண்.127, நாள் 28.03.2012ன் படி மனையிட ரி. ச. எண்.663/2ல் தானமாக பெறப்பட்ட மண்சாலை பரப்பளவு 7728 சதுர அடிகளாகும். இது தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்ததில் இம்மனையிடத்தின் மொத்த பரப்பளவு 35180.50 சதுர அடிகளாகும். அதில் 21 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 1106 சதுர அடி நிலம் பொதுப்பயன்பாட்டிற்கான திறவிடமாக (open space) ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் மன்ற தீர்மானம் எண்.239, நாள் 30.08.2012ல் மேற்குறிப்பிட்ட மனைபிரிவில்5 மீட்டர் அகலமுள்ள தார்ச்சாலை, வடிகால் வசதி மற்றும் கீழ்புறத்தில் 2 ½" பிவிசி குடிநீர் குழாய் தார்ச்சாலை நீளத்திற்கு மனுதாரரால் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது எனவும், மின்விளக்கு அமைக்க ரூ. 30,000/- கொடுக்கவும் சம்மதித்துள்ளார்கள் எனவும் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. (சலான் எண். 235, நாள் 14.09.2012ன் மூலம் ரூ 30,000/- பேரூராட்சிக்கு வரவு எடுக்கப்பட்டுள்ளது) மேலும் மொத்த பரப்பளவின் அடிப்படையில் 35,180.50 சதுர அடிக்கு 10 சதவிகிதம் இடம் 3518 சதுர அடிகள் நிலம் பொதுப்பயன் பாட்டிற்கு (reserve site) ஒதுக்குவதற்கு பதிலாக 1106 சதுர அடிகள் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள 2412 சதுர அடிக்கான வழிகாட்டு மதிப்பின் (Guideline value) படியான தொகை ரூ. 300 x 2412 = ரூ.7,23,600/- பேரூராட்சிக்கு இழப்பு ஆகும். எனவே, இத்தொகை விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்பட வேண்டும்.

8. மன்ற தீர்மானம் எண்.230, நாள் 30.08.2012ன் படி மனையிட ரி. ச. எண்.602/1பி தானமாக பெறப்பட்ட மண்சாலை பரப்பளவு 48,404 சதுர அடிகளாகும். இது தொடர்பான பத்திரத்தை ஆய்வு செய்ததில் இம்மனையிடத்தின் மொத்த பரப்பளவு 93,952.60 சதுர அடிகளாகும். அதில் 70 மனைப்பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. மொத்தப்பரப்பளவில் 10 சதவிகிதம் இடம் 9395 சதுர அடிகள் பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் ஆனால் 9395 சதுர அடி நிலம் பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட்ட விவரம் பத்திரத்தில் இல்லை. எனவே இதன் வழிகாட்டு மதிப்பு ரூ. 300 x 9395 = ரூ.28,18,500/- பேரூராட்சிக்கு இழப்பு ஆகும். மேலும் இம்மனையிடத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும் எனவும், பொதுப்பயன்பாட்டிற்கு போதிய இடம் ஒதுக்கப்படும் எனவும் இவையனைத்தும் 4 மாத காலத்திற்குள் செய்து கொடுக்கிறோம் என விண்ணப்பதாரர் உறுதி மொழி கொடுத்துள்ளார். ஆனால் இந்த உறுதி மொழிகள் உள்ள வேலைகள் அனைத்தும் செய்து முடித்துள்ளமைக்கான விவரம் கோப்பில் இல்லை.

9. மன்ற தீர்மானம் எண்.117, நாள் 16.08.2013ன் படி மனையிட ரி. ச. எண்.44/2, 3, 3பி ஒப்படைக்கப்பட்ட மண்சாலை பரப்பளவு 20,256 சதுர அடிகளாகும். மற்றும் தீர்மானம் எண்.126, நாள் 16.08.2013ன் படி மனையிட ரி. ச. எண்.651/2, ஒப்படைக்கப்பட்ட மண்சாலை பரப்பளவு 4679¼, 3875¼ சதுர அடிகளாகும். இதுதொடர்பான கிரையப்பத்திரத்தை ஆய்வு செய்ததில் இடத்தின் மொத்த விஸ்தீரணம் 99 சென்ட (அல்லது) (99x436) 43,164 சதுர அடிகளாகும். இம்மனையிடத்திற்கான பொதுப்பயன்பாட்டிற்கான 10 சதவிகிதம் இடத்தின் பரப்பளவு 4,316 சதுர அடிகளாகும். ஆனால் இந்த அளவுள்ள இடம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட விபரம் பத்திரத்தில் இல்லை. எனவே இவ்விடத்திற்கான வழிகாட்டும் மதிப்பு (ரூ.36.00x4163)ரூ.1,46,744/- பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுகிறது.

10. மன்ற தீர்மானம் எண்.177, நாள் 08.11.2013ன் படி மனையிட ரி. ச. எண்.653/2, தானமாக ஒப்படைக்கப்பட்ட மண்சாலை பரப்பளவு 12,943 சதுர அடிகளாகும். இது தொடர்பான தான செட்டில்மெண்ட் பத்திரப்படி 26 மனைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட மொத்த மனைப்பிரிவு 41,728 சதுர அடிகளாகும். இதில் 10 சதவிகிதம் இடம் 4,173 சதுர அடி நிலம் பேரூராட்சியினால் பெறப்பட்ட விபரம் இல்லை. எனவே இதன் வழிகாட்டும் மதிப்பின் படி (ரூ.12.61x4173)ரூ.52,622/- பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுகிறது.

11. மன்ற தீர்மானம் எண்.137, நாள் 24.09.2014ன் படி மனையிட ரி. ச. எண்.663/2ஏ தானமாக ஒப்படைக்கப்பட்ட மண்சாலை பரப்பளவு 10,000 சதுர அடிகளாகும். இதுதொடர்பான தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் மனையிடத்தின் மொத்த பரப்பளவு எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதனால் 10 சதவிகிதம் பொதுப்பயன்பாட்டிற்கான திறவிடத்தின் அளவு உறுதி செய்ய இயலவில்லை. மேலும் இம்மனையிடத்திற்கு அடிப்படை வசதிகள் விண்ணப்பதாரரால் செய்து கொடுக்கப்பட்ட விபரம் ஏதும் இக்கோப்பில் இல்லை.

12. பேரூராட்சி மன்ற கூட்டநாள் 31.03.2015 மன்ற பொருள் 17 மனையிட ரி. ச. எண்.914/2 தானமாக ஒப்படைக்கப்பட்ட மண்சாலை பரப்பளவு 9,635½ சதுர அடிகளாகும். இதுதொடர்பான தானசெட்டில்மெண்ட் ஜெராக்ஸ் நகல் மட்டுமே உள்ளது. மனையிடத்தின் மொத்த பரப்பளவு குறிப்பிடப்படவில்லை.பத்திரத்தில் மனையிடத்தின் மொத்த பரப்பளவு எதுவும் குறிப்பிடப்படவில்லை.

13. மேலும் இம்மனையிடத்தில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட விவரம் எதுவும் கோப்பில் இல்லை. எனவே மனையிடத்தின் மொத்த பரப்பளவு கண்டறியப்பட்டு 10 சதவிகிதம் திறவிடம்.

14. 2013 - 2014 ம் ஆண்டில் பேரூராட்சிக்கு தானமாக பெறப்பட்ட மண்சாலைகள் தொடர்பான மனையிடங்களின் மொத்த பரப்பளவில் பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவிகிதம் பொதுப்பயன்பாட்டிற்கான இடங்கள் ஒதுக்கப்படாமையால் ரூ.1,99,366/- பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

<u>குற்றச்சாட்டு எண்.2</u>

மொடக்குறிச்சி பேரூராட்சியில் புதியதாக அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளில் GI குழாய்களுக்கு பதிலாக PVC குழாய்கள் அமைக்கப்பட்டு முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளதாக கூறிய புகாரின் பேரில், சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களால் ஆய்வு அலுவலராக பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளர், திருப்பூர் மண்டலம் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலக அலுவலர் ஆகியோர் 09.04.2015 மற்றும் 10.04.2015 ஆகிய தேதிகளில் மனுதாரர்

முன்னிலையில் புகார் கூறப்பட்ட ஆழ்குழாய் கிணற்றில் தல ஆய்வுகள் மேற்கொண்டு அதன் விவரத்தினை பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர். இது தொடர்பாக நாளது வரை இப்பேரூராட்சிக்கு விவரம் ஏதும் கிடைக்கப்பெறவில்லை என்ற விவரத்தினை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

மொடக்குறிச்சி பேரூராட்சி அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு மற்றும் மனைகளிலிருந்து மண்சாலைகளை தானமாக பெற்றது – அரசு விதிகளின்படி செய்யவேண்டிய அடிப்படை வசதிகள் செய்யப்படாமலும், பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய இடம் (reserve site) பெறப்படாமலும் மண்சாலைகளை மட்டும் தானமாக பெற்றது – மேலும் அங்கீகாரம் பெறப்படாத இம்மனைப்பிரிவுகளில் கட்டிட உரிமம் வழங்கியது - அபிவிருத்திக் கட்டணம் (Development charges) வசூலிக்கப்படாமையால் வருவாய் இழப்பு - மேலும் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவிகித இடத்திற்கான வழிகாட்டு மதிப்பு (Guide line) தொகை ரூ.35,42,100/- பேரூராட்சிக்கு இழப்பு – மேலும் இச்செயலுக்கு உரிய அலுவலரின் பின்னேற்பு பெறப்படவேண்டும்.

பேரூராட்சிகளில் மனைப்பிரிவுகளை அங்கீகரிக்க கீழ்க்காணும் நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

1. அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.09.2002.
2. அரசாணை எண்.222, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 28.08.1992.
3. அரசாணை எண்.69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.03.2001.

அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.09.2002ன் படி, மனைப்பிரிவு அங்கீகாரம் கோரும் விண்ணப்பம் முதலில் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் அளிக்கப்படவேண்டும். பின்னர்உள்ளாட்சி அமைப்புகள் நிலத்தின் மீதான உரிமையாளருக்கு உள்ளது என அனைத்து பத்திரங்களுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட வேண்டும். மேலும் குறிப்பிட்டுள்ள இடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அல்லது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமானதா என்பதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் கீழ்க்காணும் விவரங்களை சரிபார்க்க வேண்டும்.

1. மனைப்பிரிவு விண்ணப்பம் நிலத்தின் உரிமையாளரால் அளிக்கப்படுகிறதா அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நபரால் அளிக்கப்பட்டுள்ளதா எனவும்,
2. விண்ணப்பத்துடன் நாளது தேதி வரையிலான வில்லங்கசான்று இணைக்கப்பட்டுள்ளதா எனவும்,
3. நில அளவைத் துறையிலிருந்து பெறப்பட்ட நிலத்தின் வரைபடம் (Survey sketch) இணைக்கப்பட்டுள்ளதா எனவும்,
4. மனைப்பிரிவு அல்லது நிலம் 1961 ஆம் ஆண்டு நில சீர்திருத்தச் சட்டம், மற்றும் 1978ஆம் ஆண்டு நகர்புற நிலங்கள் விற்பனை சட்டங்களுக்கு உட்பட்டுள்ளதா எனவும்,
5. அரசு புறம்போக்கு நிலம் ஏதேனும் உட்பட்டுள்ளதா எனவும்,
6. நிலம் அல்லது மனைப்பிரிவு பொதுப்பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளதா எனவும்,
7. நிலம் அல்லது மனைப்பிரிவு அசுத்த நீர் தேங்கியிருத்தல், அசுத்தமான சாக்கடை, அசாதரணமான சுற்றுப்புறச்சூழல் மற்றும் கற்குவாரி, சுடுகாடு போன்றவை அருகில் அமைந்திருத்தல் போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ளதா எனவும்,

உள்ளாட்சி அமைப்புகளால் சரிபார்க்கப்பட்ட பின்னர், நிர்வாக அலுவலரால் மனைப்பிரிவு விண்ணப்பம் பெறப்பட்ட 15 தினங்களுக்குள் உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக்குழுமம் அல்லது மண்டல துணை இயக்குநர், நகர் அமைப்புத் திட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

மேலும் உறுப்பினர் செயலர் / மண்டல துணை இயக்குநர் இவ்விண்ணப்பத்தினை கூர்ந்தாய்வு செய்து, உரிய தொழில்நுட்ப அனுமதியுடன் 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்படவேண்டும்.

உரிய ஒப்புதல் மற்றும் அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு கருத்துரு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெற்றவுடன், நில உரிமையாளரை, மனையிடத்திற்கான 10 சதவிகிதம் பொதுப்பயன்பாட்டிற்கான திறந்த வெளியிடம் (open space) மற்றும் முழுமைப்படுத்தப்பட்ட சாலைகள் முதலியவைகளை பேரூராட்சிக்கு ஒப்படைக்க கோரலாம். மேலும் உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகள் முதலியவை செய்து தரும்படி விண்ணப்பதாரரை கோரலாம்.

மேலும் மேற்காணும் உட்கட்டமைப்பு வசதிகளை உள்ளாட்சி அமைப்புகளே மேற்கொள்ள விண்ணப்பதாரர் விரும்பினால் அதன் மதிப்பீட்டிற்கான முழுத்தொகையையும் முன்னதாகவே செலுத்திவிட வேண்டும்.

மேற்காணும் அனைத்து நடைமுறைகளும் முடிந்தபின்னர் தானப்பத்திரம் பெற்று பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து, இம்மனைப்பிரிவுகளை முறையாக அங்கீகரிக்கலாம். மேலும் விண்ணப்பதாரரால் மனைப்பிரிவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு ஒப்படைத்த பின்னரே, இறுதியாக மன்றம் ஒப்புதல் வழங்கவேண்டும்.

ஆனால் மேற்காணும் எந்த நடைமுறையையும் பின்பற்றாமல் மண்சாலையை மட்டும் பேரூராட்சிக்கு தானமாக பெற்றுக்கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள பேரூராட்சி மன்றத் தீர்மானங்களின் மூலம் தானக்கிரையம் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயலானது அரசாணை மற்றும் விதிமுறையினை மீறிய செயலாகும். இதனால் இப்பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற வேண்டிய பொது உபயோகத்திற்கான 10 சதவிகிதம் இடம் (reserve site) உட்கட்டமைப்பு வசதிகளான தார்ச் சாலை, கழிவு நீர் செல்லும் வசதி, குடிநீர் வசதி தெருவிளக்குகள் வசதி முதலியன கிடைக்கப்பெறாமல் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மொடக்குறிச்சி பேரூராட்சியின் 2012 - 2013 ஆண்டு தணிக்கையில், கீழ்க்காணும் விவரப்படி மன்றத் தீர்மானங்களின் அடிப்படையில் தனிநபர்களின் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளிலிருந்து மண்சாலைகள் மற்றும் பொது தடங்கள் மட்டும் பேரூராட்சிக்கு தானமாக பெற்றுக் கொண்டு, பெறப்பட்ட தானக்கிரையங்களை மன்றம் அங்கீகரித்துள்ள விவரம் அறியப்பட்டது. அவைகளின் விவரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.126, நாள் 28.03.2012 மனையிட ரீ. ச.எண்.9/4ஏல் தானமாக பெறப்பட்ட மண்சாலை 7104 சதுர அடிகளாகும்.
2. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.127, நாள் 28.03.2012 மனையிட ரீ. ச.எண்.663/2ல் தானமாக பெறப்பட்ட மண்சாலை 7728 சதுர அடிகளாகும்.
3. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.230, நாள் 30.08.2012 மனையிட ரீ. ச.எண்.602/1பில் தானமாக பெறப்பட்ட மண்சாலை 48,404 சதுர அடிகளாகும்.

4. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.280, நாள் 19.10.2012 மனையிட ரி. ச.எண்.642/4ஏல் தானமாக பெறப்பட்ட மண்சாலை 24,907 சதுர அடிகளாகும்.
5. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.138, நாள் 11.05.2012 மனையிட ரி. ச.எண்.42/2ஏல் தானமாக பெறப்பட்ட மண்சாலை 2,904 சதுர அடிகளாகும்.

இம்மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் மண்சாலையை தானமாக பெற்றுள்ள நிகழ்வுகளில் கீழ்காணும் குறைபாடுகள் தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

1. மேற்கண்ட தீர்மானங்களின் மூலமாக பேரூராட்சிக்கு தானமாக பெறப்பட்ட மண்சாலைகள் அடங்கிய பத்திரங்களை (Documents) வருவாய்த் துறைக்கு அனுப்பி உட்பிரிவு (Sub division) செய்யப்படாமல் உள்ளது.
2. பெறப்பட்ட மண்சாலைகள் விவரம் பேரூராட்சியின் சாலைகள் பதிவேட்டில் பதியப்படவில்லை,
3. பேரூராட்சிக்கு மண்சாலைகளை தானமாக பெற்றவுடன் அம்மனையிடங்கள் அடங்கிய மனைப்பிரிவுகளுக்குரிய கருத்துரு விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்டு அவற்றினை செயல் அலுவலர் கூர்ந்தாய்வு செய்து அதனை 15 நாட்களுக்குள் மண்டல துணை இயக்குநர் நகரமைப்புத் திட்டம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. எனவே இச்செயலுக்கு நகர் ஊரமைப்பு ஆணையரின் பின்னேற்பு பெற்று தணிக்கைக்கு காண்பிக்கப்படவேண்டும்.

மேலும் பேரூராட்சி மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் மண்சாலைகளை தானமாக பெற்றது தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்ததில் கீழ்காணும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

1. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.126, நாள் 28.03.2012 மனையிட ரி. ச.எண்.9/4ஏல் தானமாக பெறப்பட்ட மண்சாலை 7104 சதுர அடிகளாகும். இத்தீர்மானம் தொடர்பான கோப்பு தணிக்கைக்கு அளிக்கப்படவில்லை. எனவே உரிய கோப்பு அளிக்கப்பட வேண்டும்.
2. பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.127, நாள் 28.03.2012 மனையிட ரி. ச.எண்.663/2ல் தானமாக பெறப்பட்ட மண்சாலை 7728 சதுர அடிகளாகும். இது தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்ததில் இம்மனையிடத்தின் மொத்த பரப்பளவு 35180.50 சதுர அடிகளாகும். அதில் 21 மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 1106 சதுர அடி நிலம் பொதுப்பயன்பாட்டிற்கான திறவிடமாக (open space) ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் மன்ற தீர்மானம் எண்.239, நாள் 30.08.2012ல் மேற்குறிப்பிட்ட மனைப்பிரிவில் 5 மீட்டர் அகலமுள்ள தார்ச்சாலை, வடிகால் வசதி மற்றும் கீழ்புறத்தில் 2½" பி.வி.சி குடிநீர் குழாய் தார்ச்சாலை நீளத்திற்கு மனுதாரரால் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது எனவும், மின்விளக்கு அமைக்க ரூ.30,000/- கொடுக்கவும் சம்மதித்துள்ளார்கள் எனவும் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. (சலான் எண்.235, நாள் 14.09.2012 ன் மூலம் ரூ.30,000/- பேரூராட்சிக்கு வரவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மொத்த பரப்பளவின் அடிப்படையில் 35,180 சதுர அடிக்கு 10 சதவிகிதம் இடம் 3,518 சதுர அடிகள் நிலம் பொதுப்பயன்பாட்டிற்கு (reserve site) ஒதுக்குவதற்கு பதிலாக 1106 சதுர அடிகள் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, மீதமுள்ள 2412 சதுர அடிக்கான வழிகாட்டு மதிப்பின் (Guideline value) படியான தொகை ரூ. 300 x 2412 =ரூ.7,23,600/- பேரூராட்சிக்கு இழப்பு ஆகும். எனவே இத்தொகை விண்ணப்பதாரரிடமிருந்து பெறப்பட வேண்டும்.

3. மன்ற தீர்மானம் எண்.230, நாள்30.08.2012 ன் படி மனையிட ரீ.ச.எண்.602/பி1ல் தானமாக பெறப்பட்ட மண்சாலை பரப்பளவு 48404 சதுர அடிகளாகும். இது தொடர்பான பத்திரத்தை ஆய்வு செய்ததில் இம்மனையிடத்தின் மொத்த விஸ்தீரணம் 93,952.60 சதுர அடிகளாகும். இதில் 70 மனைப்பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ளன. மொத்த பரப்பளவில் 10 சதவிகிதம் இடம் 9,395 சதுர அடிகள் பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 9,395 சதுர அடி நிலம் பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட்ட விவரம் பத்திரத்தில் இல்லை. எனவே, இதன் வழிகாட்டு மதிப்பு ரூ. 300 x 9395 =ரூ. 28,18,500/– பேரூராட்சிக்கு இழப்பு ஆகும். மேலும் இம்மனையிடத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும் எனவும், பொதுப்பயன்பாட்டிற்கு போதிய இடம் ஒதுக்கப்படும் எனவும், இவையனைத்தும் 4 மாத காலத்திற்குள் செய்து கொடுக்கிறோம் என விண்ணப்பதாரர் உறுதிமொழி கொடுத்துள்ளார். ஆனால் இந்த உறுதி மொழிகள் உள்ள வேலைகள் அனைத்தும் செய்துமுடித்துள்ளமைக்கான விவரம் கோப்பில் இல்லை. எனவே இவ்வேலைகள் அனைத்தும் செய்து முடிக்கப்படாமையால், மேற்குறிப்பிட்டுள்ள மனையிடத்தில் உள்ள மனைப்பிரிவுகளுக்கு, கட்டிட உரிமம் வழங்கும் பட்சத்தில் அதற்குரிய அபிவிருத்திக் கட்டணம், பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் நிர்ணயித்துள்ள விகிதப்படி வசூலிக்கப்படவேண்டும்.

2012 - 2013 ஆண்டில் பேரூராட்சிக்கு தானமாக பெறப்பட்ட மண்சாலைகள் தொடர்பான மனையிடங்கள் மொத்த பரப்பளவில் பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவிகிதம் பொதுப்பயன்பாட்டிற்கான இடங்கள் ஒதுக்கப்படாமையால் ரூ.35,42,100/– பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தொகையினை உரிய மனைப்பிரிவு விண்ணப்பதாரர்களிடமிருந்து அல்லது இதற்கு பொறுப்பான நபர் / நபர்களிடமிருந்து வசூலிக்கப்படவேண்டும். மேலும் மனைப்பிரிவுகளின் மொத்தப் பரப்பளவு அறியப்படாத இனங்களுக்கும் விவரம் அறியப்பட்டு 10 சதவிகிதம் திறவிடமாகவோ அல்லது அவைகளின் மதிப்புத் தொகையாகவோ பெற்று அதன் விவரம் தணிக்கைக்கு காண்பிக்கப்படவேண்டும்.

1. –
2. 7,23,600.00
3. 28,18,500.00

-------------------

35,42,100.00

-------------------

மொடக்குறிச்சி பேரூராட்சி - அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு மற்றும் மனைகளிலிருந்து மண்சாலைகளை தானமாக பெற்றது – அரசு விதிகளின்படி செய்யவேண்டிய அடிப்படை வசதிகள் செய்யப்படாமலும், பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய இடம் (reserve site) பெறப்படாமலும் மண்சாலைகளை மட்டும் தானமாக பெற்றது – மேலும் அங்கீகாரம் பெறப்படாத இம்மனைப்பிரிவுகளில் கட்டிட உரிமம் வழங்கியது - அபிவிருத்திக் கட்டணம் (Development charges) வசூலிக்கப்படாமையால் வருவாய் இழப்பு - மேலும் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவிகித இடத்திற்கான வழிகாட்டு மதிப்பு (Guide line) தொகை ரூ.1,99,366/- பேரூராட்சிக்கு இழப்பு - மேலும் இச்செயலுக்கு உரிய அலுவலரின் பின்னேற்பு பெறப்படவேண்டும்.

பேரூராட்சிகளில் மனைப்பிரிவுகளை அங்கீகரிக்க அரசாணைகளின்படி நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்டுள்ள அனைத்து நடைமுறைகளும் முடிந்த பின்னர் தானப்பத்திரம் பெற்று, பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து, இம்மனைப்பிரிவுகளை முறையாக அங்கீகரிக்கலாம். மேலும் விண்ணப்பதாரரால் மனைப்பிரிவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு ஒப்படைத்த பின்னரே, இறுதியாக மன்றம் ஒப்புதல் வழங்க வேண்டும்.

ஆனால் மேற்காணும் எந்த நடைமுறையையும் பின்பற்றாமல் மண்சாலையை மட்டும் பேரூராட்சிக்கு தானமாக பெற்றுக் கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள பேரூராட்சி மன்ற தீர்மானங்களின் மூலம் தானக்கிரையம் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயலானது அரசாணை மற்றும் விதிமுறையினை மீறிய செயலாகும். இதனால் இப்பேரூராட்சிக்கு கிடைக்கப்பெற வேண்டிய பொது உபயோகத்திற்கான 10 சதவீதம் இடம் (reserve site) உட்கட்டமைப்பு வசதிகளான தார்சாலை, கழிவுநீர் செல்லும் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்குகள் வசதி முதலியவை கிடைக்கப்பெறாமல் இழப்பு ஏற்பட்டுள்ளது,

மொடக்குறிச்சி பேரூராட்சியின் 2013–2014 ஆண்டு தணிக்கையில், கீழ்காணும் விவரப்படி மன்றத் தீர்மானங்களின், அடிப்படையில் தனிநபர்களின் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளிலிருந்து மண்சாலைகள் மற்றும் பொது தடங்கள் மட்டும் பேரூராட்சிக்கு தானமாக பெற்றுக் கொண்டு, பெறப்பட்ட தானக்கிரையங்களை மன்றம் அங்கீகரித்துள்ள விவரம் அறியப்பட்டது. அவைகளின் விவரம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1. மன்ற தீர்மானம் எண் 117/நாள்: 16.08.2013, மனையிட ரீ.ச.எண்.44/2, 3 A, 3B ஒப்படைக்கப்பட்ட மண் சாலையின் மொத்த பரப்பளவு 20286 சதுர அடிகளாகும்.
2. தீர்மானம் எண்.126/நாள்: 16.08.2013 மனையிட ரீ.ச.எண்.651/3 மண் சாலை பரப்பளவு 4679 1/4 ச.அ. மற்றும் 3875 1/2 ச.அ.
3. தீர்மானம் எண்.137/ நாள்: 24.09.14, மன்றப் பொருள் ,35, மனையிட ரீ.ச.எண்.663/2ஏ மண்சாலை பரப்பளவு 10000 சதுர அடி (3780+2400+2400+1420)
4. தீர்மானம் எண்.183/31.03.15 பொருள்: 17 மனையிட ரீ.ச.எண்.914/2 மண்சாலை 8827 1/2 சதுர அடி மற்றும் பொது உபயோக காலியிடம் 808 சதுர அடி.

இம்மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் மண்சாலையை தானமாக பெற்றுள்ள நிகழ்வுகளில் கீழ்காணும் குறைபாடுகள் தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

1. மேற்கண்ட தீர்மானங்களின் மூலமாக பேரூராட்சிக்கு தானமாக பெறப்பட்ட மண்சாலைகள் அடங்கிய பத்திரங்களை (documents) வருவாய்துறைக்கு அனுப்பி உட்பிரிவு (subdivision) செய்யப்படாமல் உள்ளது.
2. பெறப்பட்ட மண்சாலைகள் விவரம் பேரூராட்சியின் சாலைகள் பதிவேட்டில் பதியப்படவில்லை.

3. பேரூராட்சிக்கு மண்சாலைகளை தானமாக பெற்றவுடன் அம்மனையிடங்கள் அடங்கிய மனைப்பிரிவுகளுக்குரிய கருத்துரு விண்ணப்பத்தாரர்களிடமிருந்து பெறப்பட்டு அவற்றினை செயல் அலுவலர் கூர்ந்தாய்வு செய்து அதனை 15 நாட்களுக்குள் மண்டல துணை இயக்குநர் நகரமைப்புத் திட்டம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. எனவே, இச்செயலுக்கு நகர் ஊரமைப்பு ஆணையரின் பின்னேற்பு பெற்று தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

மேலும், பேரூராட்சி மன்ற தீர்மானங்களின் அடிப்படையில் மண்சாலைகளை தானமாக பெற்றது தொடர்பான கோப்புகளை ஆய்வு செய்ததில் கீழ்காணும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

1. மன்ற தீர்மானம் எண்: 117/நாள் 16.08.2013, மனையிட ரீ.ச.எண்.44/2, 3 A, 3B ஒப்படைக்கப்பட்ட மண் சாலையின் மொத்த பரப்பளவு 20286 சதுர அடிகளாகும் மற்றும் தீர்மான எண்.126/நாள் 16.08.2013, மனையிட ரீ.ச.எண்.651/2 ஒப்படைக்கப்பட்ட மண் சாலை பரப்பளவு 4679 1/4, 3875 1/2 சதுர அடிகளாகும்.
இது தொடர்பான கிரையப்பத்திரத்தை ஆய்வு செய்ததில் இடத்தின் மொத்த விஸ்தீர்ணம் 99 செண்ட் (அல்லது) (99 x 436) 43164 சதுர அடியாகும். இம்மனை இடத்திற்கான பொதுப்பயன்பாட்டிற்கான 10% இடத்தின் பரப்பளவு 4316 சதுர அடியாகும். ஆனால் இந்தஅளவுள்ள இடம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட விபரம் பத்திரத்தில் இல்லை. எனவே இவ்விடத்திற்கான வழிகாட்டும் மதிப்பு (ரூ.34,00 x 4163) ரூ.146744/. பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுகிறது. எனவே இத்தொகை விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். மேலும் இம்மனையிடத்திற்கு செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான தார்சாலை, வடிகால் வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி முதலியவைகள் விண்ணப்பதாரரால் செய்து கொடுக்கப்படும் வரை இம்மனையிடத்திற்கு கட்டிட உரிமம் வழங்குவதை தவிர்க்கலாம்.

2 மன்றத் தீர்மானம் : 177/8 11.2013, ரீ.ச.எண்.653/2 தானமாக ஒப்படைக்கப்பட்ட மண்சாலை, 12943 சதுர அடிகளாகும். இது தொடர்பான தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி 26 மனைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட மொத்த மனைப்பிரிவு 41728 சதுர அடிகளாகும். இதில் 10% இடம் 4173 சதுர அடி நிலம் பேரூராட்சியின் பெறப்பட்ட விபரம் இல்லை. எனவே இதன் வழிகாட்டும் மதிப்புப்படி (ரூ.12.61 x 4173) ரூ.52622/– பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுகிறது.
மேலும் இம்மனையிடத்திற்கு செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான தார்சாலை, வடிகால் வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி முதலியவைகள்விண்ணப்பதாரரால் செய்து கொடுக்கப் படும் வரை இம்மனையிடத்திற்கு கட்டிட உரிமம் வழங்குவதை தவிர்க்கலாம்.

3. மன்றத் தீர்மானம் :37/24.03.2014 ரீ.ச.எண்.663/2–ஐ தானமாக ஒப்படைக்கப்பட்ட மண்சாலை.10,000 சதுர அடிகளாகும். இது தொடர்பான தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் மனையிடத்தின் மொத்த பரப்பளவு எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதனால் 10% பொதுப்பயன்பாட்டிற்கான திறவிடத்தின் அளவு உறுதி செய்ய இயலவில்லை. மேலும் இம்மனையிடத்திற்கு அடிப்படை வசதிகள் விண்ணப்பதாரரால் செய்து கொடுக்கப்பட்ட விவரம் ஏதும் கோப்பில் இல்லை.
எனவே, இம்மனையிடத்தின் விஸ்தீரணம் அடிப்படையில் 10% திறவிடம் தானமாக பெறப்பட்டு அதன் விபரம் தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டும்.

4. பேரூராட்சி மன்றக் கூட்ட நாள் 31.03.2015 மன்றப் பொருள்: 17 மனையிட ரீ.ச.எண்.914/2 தானமாக ஒப்படைக்கப்பட்ட மண்சாலை 9635 1/2 சதுர அடிகளாகும். இது தொடர்பான தான செட்டில்மெண்ட் ஜெராக்ஸ் நகல் மட்டுமே உள்ளது. மனையிடத்தின் மொத்த பரப்பளவு குறிப்பிடப்படவில்லை.

மேலும் இம்மனையிடத்தில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட விபரம் எதுவும் கோப்பில் இல்லை. எனவே, மனையிடத்தின் மொத்த பரப்பளவு கண்டறியப்பட்டு 10% திறவிடம் தானமாக பெறப்பட்டு அதன் விபரம் தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டும்.

2013/2014 ஆண்டில் பேரூராட்சிக்கு தானமாக பெறப்பட்ட மண்சாலைகள் தொடர்பான மனையிடங்களின் மொத்த பரப்பளவில் பேரூராட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவீதப் பொதுப் பயன்பாட்டிற்கான இடங்கள் ஒதுக்கப்படாமையால் ரூ.1,99,366/– பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தொகையினை உரிய மனைப்பிரிவு விண்ணப்பதாரர்களிடமிருந்து அல்லது இதற்கு பொறுப்பான நபர்/நபர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். மேலும் மனைப்பிரிவுகளின் மொத்தப் பரப்பளவு அறியப்படாத இனங்களுக்கும் விவரம் அறியப்பட்டு 10 சதவீதம் திறவிடமாகவோ அல்லது அவைகளின் மதிப்புத் தொகையாகவோ பெற்று அதன் விவரம் தணிக்கைக்கு காண்பிக்கப்பட வேண்டும்.

சுருக்கம்

| | |
|---|---|
| 1. | 1,46,744.00 |
| 2. | 52,622.00 |
| 3. | --- |
| 4. | --- |
| | 1,99,366.00 |

மேலும் முறையாக அங்கீகாரம் பெறாத வீட்டுமனைப்பிரிவு ரீ.ச.எண்.642/4–A-ல் 2013–2014 ஆம் ஆண்டில் கீழ்காணும் விண்ணப்பதாரர்களுக்கு கட்டிட உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு ------- ரீ.ச.எண்.642/4–A

| வ.எண் | கட்டிட உரிம விண்ணப்ப எண். | பெயர்விபரம் திருவாளர்கள் |
|---|---|---|
| 1 | 1/2013– 14 | வி.சுந்தரம், த/பெ.வீரன் |
| 2 | 2/2013– 14 | டி.சுமதி, க/பெ.துரைசாமி |
| 3 | 3/2013– 14 | ஆர்.தங்கவேல், த/பெ.ராமசாமி கவுண்டர் |
| 4 | 4/2013– 14 | டி.பாலகிருஷ்ணன், த/பெ.துளசிமணி கவுண்டர் |
| 5 | 9/2013– 14 | எம்.பழனிவேல், த/பெ.முத்துசாமி |
| 6 | 10/2013–14 | ஆர்.கிரிபிரசாத், த/பெ.ராமசாமி |
| 7 | 15/2013–14 | டி.குமாரவேல் , த//பெ. பி. தீர்த்தபதி |
| 8 | 20/2013–14 | டி.சாந்தி, க/பெ. தேசிங்கு ராஜா |
| 9 | 47/2013– 14 | கே.குமாரவடிவேல், த/பெ. தீர்த்தபதி |
| மனைப்பிரிவு -------- ரீ.ச.எண்.663/2 | | |
| 10 | 5/2013–14 | பி.சண்முக சுந்தரம், த/பெ. எஸ்,எம்,பெரியசாமி |

மனைப்பிரிவு ரீ.ச.எண். 642/4 ஏ க்குரிய கோப்புகள் மற்றும் கிரையப்பத்திரங்கள் தணிக்கைக்கு அளிக்கப்படாமையால் இம்மனையிடத்தின் மொத்த பரப்பளவு மற்றும் அம்மனையிடத்தில் பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டிய 10 சதவீதம் திறவிடத்தின் பரப்பளவு முதலியவை உறுதி செய்ய

இயலவில்லை. எனவே இந்தப் பொதுப்பயன்பாட்டிற்கான இடத்தின் பரப்பளவை கண்டறிந்து அவற்றின் வழிகாட்டும் மதிப்புத் தொகையினை மனையிட உரிமையாளரிடம் இருந்து வசூலித்து பேரூராட்சிக்கு வரவாக்கப்படவேண்டும்.

மேற்காணும் கட்டிட உரிமங்களுக்கு அபிவிருத்தி கட்டணம் (Development Charges) வசூலிக்கப்படாமல் கட்டிட உரிமம் வழங்கப்பட்டுள்ளமையால் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இவ்விழப்புத் தொகை கணக்கிடப்பட்டு இதற்கு காரணமானவர்களிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

13. பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஆய்வு அலுவலர்களது அறிக்கை விவரங்கள் பின்வருமாறு:

"மொடக்குறிச்சி பேரூராட்சியில் 2012-2013 மற்றும் 2013-2014 ஆம் ஆண்டுகளில் 10 பணிகள் ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் மினி பவர் பம்பு அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. திரு.பா.செந்தில்குமார், த/பெ.பாலசுப்பிரமணி காட்டுப்பாளையம், மொடக்குறிச்சி அவர்களது புகார் மனுவில் ஆழ்துளை கிணறு அமைத்ததிலும் மின்விசை பம்பு பொருத்தப்பட்டதில் GI குழாய்க்கு பதிலாக PVC குழாய் பொருத்தப்பட்டுள்ளது. இதில் ஊழல் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் கீழ்கண்ட இரு பணிகள் 10,04,16 அன்று தல ஆய்வு செய்யப்பட்டதின் விவரம்

1) வார்டு எண். 4 மஞ்சக்காட்டு வலசு பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் மற்றும் குழாய்கள் பொருத்தும் பணி மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் கோப்பு எண்.302/2012 அளவு புத்தக எண் 26/2012-2013.

மேற்கண்ட ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள குழாய்களை வெளியே எடுக்கப்பட்டது அளவு புத்தகம் மற்றும் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறு 1 1/4' GI குழாய் 72m ஆழத்திற்கு பொருத்தப்பட்டுள்ளது. பொருள்கள் இருப்பு பதிவேடு பக்கம் 15 பதிவு செய்யப்பட்டுள்ளது. அளவு புத்தக எண்.26/2012-2013ல் பக்கம் எண் 60ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இதில் எவ்வித தவறும் இல்லை.

2) வார்டு எண்.1 ஊஞ்சப்பாளையம் பூசாரிக்காடு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி மதிப்பீடு 1.00 இலட்சம் கோப்பு எண். 1/2013 அளவுப் புத்தகம் எண் 12/2012-2013.

மேற்படி ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி 15.05.2013 ல் செய்து முடிக்கப்பட்டு இன்று வரை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை. மேலும் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டதில் ஆழத்தை சரிபார்க்கப்பட்டதின் விவரம்.

| அளவுபுத்தகத்தின் படி ஆழம் (length) மீட்டரில் | தள ஆய்வில் கண்டறியப் பட்டது |
|---|---|
| 251.40 மீ | 198.50 மீ |

வித்தியாசம் = 52.90 மீ
அதிகப்படியான செலவினம் = 52.90 x 250
= 13,225.00

மேற்படி பணியில் கூடுதலாக 11,225/- ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணி பயன்பாட்டிற்கு கொண்டுவராததால் இப்பணிக்கு செலவிடப்பட்ட தொகை. ரூ.69,658/- பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது"

II. ஆழ்குழாய் கிணறு ஆய்வு – ஆழம் குறைவாக உள்ளது 52.90 மீ

"புகார் அடிப்படையில் ஊஞ்சப்பாளையம் பூசாரிக்காடு பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளதில் திட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்ட 251.40 மீட்டருக்கு பதிலாக 198.50 மீட்டர் மட்டும் துளையிடப்பட்டுள்ளது. ஆனால் திட்டமதிப்பீடு முழுமைக்கும் பட்டியல் தொகை ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஆழத்தின் அளவு 52.90மீ குறைக்கப்பட்டு முறைகேடு (ரூ.13,225) புரியப்பட்டுள்ளது. இதற்கு சம்மந்தப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் முழுப் பொறுப்பாவார்கள்.

இருப்பினும் பட்டியல் தொகை வழங்குவதற்கு முன் மேற்படி ஆழ்துளை கிணற்றை நேரில் பார்வையிட வேண்டியது செயல் அலுவலரின் கடமையாகும். மேற்படி ஆழ்துளைக் கிணறு நாளது தேதிவரை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படாமல் அரசுநிதி வீணாக்கப்பட்டதற்கு செயல் அலுவலர் பொறுப்பாவார்.

மேற்கண்ட இரண்டு நிகழ்வுகளிலும் செயல் அலுவலர் விதிகளை மீறிசெயல்பட்டு பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட காரணமாக இருந்துள்ளார்.''

14. இதனைத் தொடர்ந்து மனுதாரரின் 27.01.2016ம் நாளிட்ட பிறிதொரு முறையீடு வரப்பெற்றுள்ளது. இம்முறையீட்டில் மேற்படி முன்னாள் செயல் அலுவலர் திரு. ஆ. தேவா அவர்களால் 2012 - 2013, 2013 - 2014, 2014 - 2015ம் ஆண்டுகளில் ஏற்பட்ட உள்ளாட்சி நிதி இழப்பீடு குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கையின் விவரங்களை குறிப்பிட்டுள்ளார்.

15. மேலும் கீழ்க்கண்டவாறு ஈரோடு மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கை ஆய்வாளரது தணிக்கை குறிப்பின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

நிலுவையில் உள்ள பத்திகள் விவரம் (மொடக்குறிச்சி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்)

தணிக்கை ஆண்டின் முடிவில் ரூ. 61,29,260- உள்ளடக்கிய 235 தணிக்கை தடைப்பத்திகள் இன்னும் நிவர்த்திக்கப்படாமல் நிலுவையாக உள்ளது. இவற்றினை நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

| வ.எண். | ஆண்டு | பத்திகள் | மொத்தபத்திகள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | 2006 - 2007 | 12,29,31,33,40,43 & 52 | 7 | 56.067/– |
| 2. | 2009 – 2010 | 48(2),(3),49(1),(2), 50(1),(2),59(2)(6) | 4 | 2,720/– |
| 3. | 2010 – 2011 | 8,21 & 22 | 3 | – |
| 4. | 2011 – 2012 | 8,16,17,18,24,28,29,41,47&48 | 10 | 5,660/– |
| 5. | 2012 – 2013 | 7 முதல் 74 முடிய | 68 | 43,09,787/- |
| 6. | 2013 – 2014 | 8 முதல் 82 முடிய | 75 | 6,43,141/- |
| 7. | 2014 – 2015 | 8 முதல் 75 முடிய | 68 | 11,11,865/- |
| | | மொத்தம் | 235 | 61,29,260/- |

16. புகார் தாரரான திரு. பி. செந்தில் குமார் 2வது வார்டு உறுப்பினர் மொடக்குறிச்சி பேரூராட்சி என்பவரது புகார்கள் குறித்து பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களது ஆணைகளின் படி ஆய்வு அலுவலர் குழு அமைக்கப்பட்டு விரிவான தல ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வு அறிக்கையும் கோரி பெறப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. மேற்படி ஆய்வு அறிக்கையில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி பேரூராட்சிகளின் துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அனுமதி பெறப்படாமலும் பொது இடம் 10% பேரூராட்சிக்கு தானமாக பெறாமலும் வட்டாட்சியரிடமிருந்து தடையின்மை சான்று பெறாமலும் பல்வேறு மனைப்பிரிவுகளின் தெருக்களை மட்டும் பேரூராட்சிக்கு தானப்பத்திரம் செய்தும், விண்ணப்பதாரர்களின் தானப்பத்திரத்தினை பேரூராட்சி மன்றத்தில் வைத்து எவ்வித குறிப்புமின்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கீழ்க்கண்டுள்ள முறைகேடுகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

1. மாவட்ட ஆட்சியரின் தடையின்மை சான்று பெறப்படாதது.
2. துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு அங்கீகாரம் பெறப்படாமை.
3. நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதியின்றி கட்டிட அனுமதி வழங்கியது.
4. முறைகேடாக மன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

புகாரில் குறிப்பிட்டுள்ள 2 வது குற்றச்சாட்டான ஆழ்குழாய் கிணறுகளில் ஜி.ஐ பைப்புகளுக்கு பதிலாக பி.வி.சி பைப்புகள் பொருத்தப்பட்டது குறித்து மேற்படி ஆய்வு குழுவினரால் 2 இடங்களில் தலஆய்வு செய்யப்பட்டு அதன் விவரம் ஆய்வுக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்குறிப்பின் படி ஊஞ்சல்பாளையம் பூசாரிக்காடு என்னும் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளதில் திட்டமதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்ட 231.40 மீட்டருக்கு பதிலாக 198.50 மீட்டர் மட்டும் போடப்பட்டது. ஆனால் திட்ட மதிப்பீட்டின் படி பட்டியல் தொகை முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி ஆய்வுக்குறிப்பின் படி இரண்டு நிகழ்வுகளிலுமே செயல் அலுவலர் விதிகளை மீறி செயல் பட்டு பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட முழுதும் காரணமாக இருந்துள்ளார் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

17 மேலும் இந்நிகழ்வுகள் குறித்து உதவி பொறியாளர் திரு. சண்முகசுந்தரம், திரு. கே. மகேந்திரன், ஆய்வு அலுவலர்(பேரூராட்சி இயக்குநர் அலுவலகம்) மற்றும் கி. மனோகரன், உதவி செயற்பொறியாளர், திருப்பூர் மண்டலம் ஆகியோர்களிடம் 27.11.2015ம் நாளன்று இம்முறைமன்றத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு எழுத்து பூர்வமாக வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :-

" **திரு. S. செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில்** "முறையீடு குறித்து நான் அந்த பேரூராட்சியில் ஆழ்துளை கிணறு பிவிசி பைப் பதித்த பணிகள் குறித்து என்னிடம் ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட இடத்தையும் ஆய்வு செய்தனர். 2013ம் ஆண்டு மாவட்ட கொள்முதல் குழு அங்கீகரித்த விற்பனையாளரிடம் அந்த ஜிஐ பைப்களை கொள்முதல் செய்து அந்த பைப்புகள் ஆழ்துளை கிணற்றில் பொறுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மற்றொரு ஆழ்துளை கிணற்றில் சம்பந்தப்பட்ட பணி மதிப்பீட்டில் 252 மீட்டர் ஆழத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கப்படவேண்டுமென பணி மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டு அதற்கான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவில் ஆழ்துளை கிணறு 198.50 மீட்டர் ஆழமிருந்ததாக ஆய்வு குழுவினர் கண்டறிந்தார்கள். அதனால் <u>இழப்பு ரூ.13,225/-</u> என குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**திரு. K. மகேந்திரன், ஆய்வு அலுவலர் தனது வாக்குமூலத்தில்**
"முறையீடு குறித்து அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் தெருக்கள் மட்டும் தானமாக பெற்று பேரூராட்சிக்கு சேரவேண்டிய 10 சதவிகிதம் பொது இடத்தை பெறப்படாமை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், நகர ஊரமைப்பு துறையால் அனுமதி பெறாத மனைப்பிரிவுகளில் உள்ள தெருக்கள் மட்டும் தானமாக பெறப்பட்டது. பேரூராட்சிக்கு சேர வேண்டிய 10 சதவிகிதம் பொது இடம் தானமாக பெறப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் 251.40 மீட்டர் போடப்படவேண்டியதில் 198.50 மீட்டர்தான் போடப்பட்டது. பொது வகைப்பாட்டிற்கான நிலம் ஒதுக்காத வகையில் பேரூராட்சிக்கு தோராயமாக ரூ.51,84,524/- இழப்பு ஏற்பட்டது. மற்றும் குழாய் பொருத்தும் வகையில் பேரூராட்சிக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.1,00,000/- என தெரிவித்துள்ளார்".

**திரு. K. மனோகரன், உதவி செயற்பொறியாளர் தனது வாக்குமூலத்தில்**
"முறையீடு குறித்து அதிகப்படியான செலவினம் 52.90 மீட்டர் x 280 ரூ.13, 225/- மேற்படி பணியில் கூடுதலாக ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்".

18. 30.11.2015 அன்று திரு தேவா, முன்னாள் செயல் அலுவலர் இம்முறைமன்றத்திற்கு நேரில் ஆஜராகி அளித்த தனது வாக்குமூலத்தில், நகர ஊரமைப்பு ஆணையர் அவர்களின் 6624/2012/LA - 2/ நாள் 17.07.2012ன் படி விதிகளுக்குட்பட்டு 10% திறவிடம் தவிர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்து மேற்படி கடித நகல் மற்றும் அரசாணை எண். 57, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, நாள் 03.05.2005ன் படி வெளியிடப்பட்ட திருத்தங்கள் தொடர்பான நகலினையும் சமர்ப்பித்தார். இவற்றை பரிசீலித்ததில் மேற்படி கட்டிட விதிகளுக்கான திருத்தங்கள் வெளியிடப்பட்ட அரசாணை ஊரக வளர்ச்சித் துறையினால் 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின்படி வெளியிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிந்தது. இச்சட்டம் ஊரக உள்ளாட்சிகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகுமென்பதால் இவரது கூற்றினையும் ஆதாரங்களையும் அடிப்படையாக ஆதாரமாக எடுத்துக்கொள்ள இயலாது.

19. இதனை தொடர்ந்து மனுதாரரது முறையீடுகளிலும் அலுவலர்களது அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய ஆதாரமான உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் 2012 - 2013 ல் ஏற்பட்ட நிதிஇழப்பு தொடர்பான விவரங்கள் இம்முறைமன்ற கடித எண். ந.க.129/அ1/2015-11, நாள் 16.02.2016ன் படி உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநகரத்திலிருந்து பெறப்பட்டது. அதன்படி உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரக கடித எண். ந.க.8748/பே.த-2/14, நாள் 22.03.2016ன் வாயிலாக மேற்படி நிகழ்வுகளினால் மொடக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு தேவா என்பவரால் ஏற்படுத்தப்பட்ட நிதி இழப்பு குறித்து கீழ்க்கண்டவாறு இறுதி அறிக்கை பெறப்பட்டுள்ளது:-

*"நிதியிழப்பு தொகை ரூ.38,42,047/- 2012-13ம் ஆண்டு தணிக்கையில் நேரடி இழப்பு என 22 பத்திகளை உள்ளடக்கியதாகும். இவ்விவரம் தணிக்கை அறிக்கை முடிவில் பத்தி எண்.76ல் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 22 பத்திகளும் தணிக்கை அறிக்கையில் வாலாயமாக இடம் பெறும் வரி மற்றும் வரியில்லா கட்டணங்களின் நிலுவைத் தொகை, குடிநீர் இணைப்பிற்காக செலுத்தப்பட்ட முன் வைப்புத் தொகையினை அரசாணைகளை மீறி திருப்ப வழங்கியது. விதிமுறைகளை மீறி தெருவிளக்கு உபகரணங்கள் வாங்கியது தொடர்பான இனங்களாகும்"*

*எனவே, இவ்வறிக்கையின் படி திரு. தேவா, முந்தைய செயல் அலுவலர் அவர்கள் 30.11.2015 அன்று நேரில் ஆஜராகி அளித்த தனது வாக்குமூலத்தில் 2012 – 2013 ல் அரசு விதிமுறைகளை பின்பற்றாமல் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் மற்றும் தானமாக பெற்ற மனைப்பிரிவுகளில் கட்டிட உரிமம் வழங்கியது, அபிவிருத்திக் கட்டணம் வசூலிக்கப்படாமையால் ஏற்பட்ட வருவாய் இழப்பு மற்றும் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய 10% இடத்திற்கான வழிகாட்டு மதிப்பு ஆகிய இனங்களில் ஏற்பட்ட இழப்பு ரூ.35, 42,100/- எனவும் இதற்கு திரு. தேவா, முன்னாள் செயல் அலுவலர்தான் பொறுப்பாவார் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.*

20. மொடக்குறிச்சி பேரூராட்சியின் செயல் அலுவலர் திருமதி டார்த்தி அவர்கள் 05.04.2016ம் நாளன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு நேரில் ஆஜராகி புகாரில் குறிப்பிட்டுள்ள இனங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை தடைகள் குறித்து ஆவணங்களை பரிசீலனைக்கு சமர்ப்பித்தார். மேலும் புகாரில் குறிப்பிட்டுள்ள ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. ஆ.தேவா என்பவர் மீது 2012 – 2013, 2013 – 2014 ஆகிய இரு ஆண்டுகளில் அங்கீகரிக்கப்படாத மனைபிரிவுகள் தொடர்பான முறைகேடுகளினால் ஏற்பட்ட நிதிஇழப்பு குறித்து எழுப்பப்பட்டுள்ள தணிக்கை தடைகள் குறித்தான விவரங்களை கீழ்க்கண்டவாறு வழங்கியுள்ளார்.

| வ. எண். | பத்தியின் விவரம் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | மொடக்குறிச்சி பேரூராட்சி அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு மற்றும் மனைகளில் இருந்து மண் சாலைகளை தானமாக பெற்றது அரசு விதிகளின் படி செய்யவேண்டிய அடிப்படை வசதி செய்யப்படாமலும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய இடம் (Reserved site) பெறப்படாமலும் மண் சாலைகளை தானமாக பெற்றது மேலும் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகளில் கட்டிட உரிமம் வழங்கியது. அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படாதது வருவாய் இழப்பு மேலும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்படவேண்டிய 10 சதவீத இடத்திற்கான வழிகாட்டி மதிப்பு தொகை ரூபாய் 35,42,000/- பேரூராட்சிக்கு இழப்பு. | ரூ.35,42,000/- |

| | | |
|---|---|---|
| 2. | மொடக்குறிச்சி பேரூராட்சி அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு மற்றும் மனைகளில் இருந்து மண் சாலைகளை தானமாக பெற்றது அரசு விதிகளின் படி செய்யவேண்டிய அடிப்படை வசதி செய்யப்படாமலும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய இடம் (Reserved site) பெறப்படாமலும் மண் சாலைகளை தானமாக பெற்றது மேலும் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகளில் கட்டிட உரிமம் வழங்கியது. அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படாதது வருவாய் இழப்பு மேலும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்படவேண்டிய 10 சதவீத இடத்திற்கான வழிகாட்டி மதிப்பு தொகை ரூபாய் 1,99,366/- பேரூராட்சிக்கு இழப்பு. | ரூ.1,99,366/- |
| | மொத்தம் | ரூ.37,41,366/- |

மனுதாரரது இரண்டாவது புகாரான ஆழ்துளை கிணறு அமைத்தல் முறைகேடுகள் தொடர்பாக பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலக ஆய்வுக் குழு அறிக்கையில் மேற்குறிப்பிட்டவாறான விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, இம்முறைமன்றம் உரிய விசாரணை வாக்குமூலங்கள் அடிப்படையிலும் உள்ளாட்சி நிதிதணிக்கை அறிக்கைகள் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரக ஆய்வறிக்கை மற்றும் தொடர்புடைய ஆவணங்களையும் பரிசீலித்ததின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

*(i)* *மொடக்குறிச்சி பேரூராட்சி அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு மற்றும் மனைகளில் இருந்து மண் சாலைகளை தானமாக பெற்றது அரசு விதிகளின் படி செய்யவேண்டிய அடிப்படை வசதி செய்யப்படாமலும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய இடம் (Reserved site) பெறப்படாமலும் மண் சாலைகளை தானமாக பெற்றது மேலும் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவுகளில் கட்டிட உரிமம் வழங்கியது. அபிவிருத்தி கட்டணம் வசூலிக்கப்படாதது வருவாய் இழப்பு மேலும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்படவேண்டிய 10 சதவீத இடத்திற்கான வழிகாட்டி மதிப்பு தொகை ரூபாய் (35,42,000 + 1,99,366 = 37,41,366) (ரூபாய் முப்பத்தேழு இலட்சத்து நாற்பத்தோறாயிரத்து முன்னூற்று அறுபத்தாறு மட்டும்) பேரூராட்சிக்கு இழப்பு என கணக்கிட்டு திரு. ஆ. தேவா, முன்னாள் செயல் அலுவலர், மொடக்குறிச்சி பேரூராட்சி என்பவரிடமிருந்து வசூலித்து உரிய கணக்கு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.*

*(ii)* *இரண்டாவது குற்றச்சாட்டான ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி தொடர்பாக ஏற்பட்ட இழப்பீட்டு தொகையினை உறுதி செய்து பொறுப்பான அலுவலர்களிடமிருந்து வசூலித்து உரிய கணக்கு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.*

*(iii)* *நாளது தேதி வரை உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளபடி பிற இழப்பீடுகள் அனைத்தும் கணக்கீடு செய்து, இழப்பீடு தொகையினை உறுதி செய்து உரியவர்களிடம் வசூலித்து உரிய கணக்கு தலைப்பில் செலுத்திட வேண்டும்.*

மேற்கண்ட உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகள் மற்றும் பேரூராட்சி இயக்கக தல ஆய்வு அறிக்கைகளின்படி பொறுப்பானவர்களிடமிருந்து நிதி இழப்பீடுகள் முழுமையாக வசூலித்து சரிகட்டப்படுவதை பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு கண்காணிக்குமாறும் ஆணையிடப்படுகிறது. மேலும், மொத்த இழப்பீட்டினை நிர்ணயித்து 6 மாத காலவரம்பிற்குள் சரிகட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிடப்படுகிறது, அவ்வாறு சரிகட்டப்படாத இனங்களில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டத்தின் பிரிவு 8(4)ன் படி 1864. ம் ஆண்டு தமிழ் நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின்படி நில வருவாய் பாக்கி இருந்தாற் போன்று வசூலிக்கப்பட வேண்டுமென ஆணையிடப்படுகிறது,

இது தொடர்பான நடவடிக்கை விவரங்கள் அடங்கிய அறிக்கையினை இம்மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறும் ஆணையிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணை இடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலருக்காக.

பெறுநர்

1. பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை—108.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு மாவட்டம் , ஈரோடு .

3 திரு.ஆ. தேவா, முன்னாள் செயல் அலுவலர், மொடக்குறிச்சி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம். Pin code: 638104

4. திருமதி. டார்த்தி, செயல் அலுவலர், மொடக்குறிச்சி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம். Pin: 638104

5. திரு.B. செந்தில் குமார், மனுதாரர்.2வது வார்டு உறுப்பினர், மொடக்குறிச்சி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம். 638104

(வரிசை எண் 3 முதல் 5 வரை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வழியாக 6 நகல்கள் – சார்வு நகல்கள் அனுப்பி வைக்கும் பொருட்டு)